Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 29 | 12-06-2003 | வியாழக்கிழமை | ஓசை 114

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.
கணேசா நகையகம்

194,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (F-8152)
123,பஜார் வீதி,
வவுனியா.

டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டில் முன் வைத்த

# தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பிற்கான பிரதமரின் யோசனை புலிகளால் நிராகரிப்பு!

## பேச்சை மீண்டும் ஆரம்பிக்க இடைக்கால நிர்வாக கட்டமைப்பு வரைபை முன்வைக்கவும் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டில் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பிற்கான பரிந்துரைகளில் புதிய யோசனைகள் எதுவுமில்லை. பழைய யோசனைகளுக்கு அளிக்கப்பட்ட புதிய பெயரென அதனை நிராகரித்துள்ள விடுதலைப்புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதானால் விடுதலைப்புலிகளின் பரந்த பங்களிப்புடன் கூடிய ஓர் இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பிற்கான திட்ட வரைபை அரசாங்கம் முன்வைக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமைச் செயலகம் இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களால் ஆக்கப்பட்டுள்ள புதிய பெயருடன் கூடிய அவரது முன்னைய நிலைப்பாட்டின் மீள் யோசனை அறிக்கையைப் போன்றதான நிலைச்சட்டங்களுக்கு உட்பட்டதான ஒரு தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பிற்கான பொருத்தமற்றவரைபினை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

பிரதமரின் யோசனை அறிக்கையானது எதுவொரு புதிதான விடயங்களையும் கொண்டிருக்

(08ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலின் உரை குறித்து ஆராய பொ.ஐ.மு.வினால் குழு நியமனம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் ஆற்றிய உரை குறித்து ஆராய பொ. ஐ. முன்னணி ஏழு பேர் அடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது.

சிறிலங்கா சனாதிபதியின் தலைமையில், கடந்த திங்களன்று கூடிய பொ.ஐ. மு. செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான இந்தக் குழுவில் மக்கள் ஐக்கிய முன்னணியின் [illegible] தினேஷ் குண

(08ஆம் பக்கம் பார்க்க)

# பொது இடங்களில் இராணுவம் இருப்பது இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளது

## மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப்

மன்னார் மாவட்டத்தில் மக்கள் வாழ்விடங்கள் மற்றும் பொது இடங்களில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்து நிலை கொண்டிருப்பது மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளது என மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் தொக்கம் கட்டைஅடம்பன் வரையுள்ள கிராமங்களில் சிறிலங்காப் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

உயிலங்குளம் முழுவதும் படையினரின் பிடியில் உள்ளது தலைமன்னாரிலும் மிகப்பெரிய அளவிலான சிறிலங்கா கடற்படைத்தளம் மக்கள் மீள் குடியமர்வுக்கு இடையூறாகவுள்ளது. சிறிலங்கா கடற்படையினர் தாழ்வுப்பாட்டுக் கிராமத்தின் முக்கிய வீதியிலும் மற்றும் மக்கள் கடற்கரைக்குச் செல்லும் வீதியின் நடுவில் தளம் அமைத்துள்ளதால் மக்கள் கடலுக்குச் செல்லமுடியாத நெருக்கடி உள்ளது.

# கையஸ் வானில் வந்தவர்களால் வயோதிபர் ஒருவர் கடத்தப்பட்டார்

## வடமராட்சி-திக்கத்தில் சம்பவம்

வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த பொதுமகன் ஒருவர் வீதியில் வழிமறிக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளார்.

இப் பரபரப்பான சம்பவம் நேற்று முன்தினம் மாலை வடமராட்சியின் திக்கம் கல்லாந்து சந்திப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பொலிகண்டியைச் சேர்ந்தவரான பாண்டித்துரை குலசிங்கம் (வயது-50) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

இவர் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை இவருக்கு முன்னால் வந்து நின்ற கையஸ் வானில் வந்தவர்கள் இவரைக் கடத்திச்

(08ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ்—இராணுவ கூட்டு ரோந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரும் பொலிசாரும் இரவு பகலாக கூட்டு ரோந்து நடவடிக்கையிலீடுபட்டுள்ளனர். அத்துடன் நகரின் முக்கிய கேந்திர நிலையங்களில் இராணுவமும் பொலிசாரும் ஆயுதங்களுடன் தரித்து நிற்கின்றனர்.

இராணுவம் மற்றும் பொலிசாரின் இந்த நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தமிழ்ப் பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் ரோந்தை அதிகரித்துள்ளதையடுத்து மக்கள் மத்தியில் ஒருவகை பீதி நிலவிவருகின்றது.

# தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை போதனா வைத்திய சாலைகளிலும் பொதுவைத்தியசாலைகளிலும் தொடர்ந்து மேற்கொள்வோம் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

தமது கோரிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சு உத்தியோக பூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லையென சங்கம் அறிவித்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு விசேட சலுகைகள் அளிக்கப்படும்!

## டோக்கியோவில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் தனியார் துறைக்கு பாரிய பங்குண்டு என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நேற்று டோக்கியோவில் வர்த்தக சமூகத்தினர் மத்தியில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கம் மேலும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் வண்ணம் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்து வருகின்றது.ஏற்றுமதித்துறையை மேம்படுத்துவதற்காக பலநாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுகின்றன. இந்துமா

(08ஆம் பக்கம் பார்க்க)

# நோயாளர் நலன் கருதி வேலை நிறுத்தத்தைக் கைவிடுக!

## மருத்துவ அதிகாரிகளிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

நோயாளரின் நலன்கருதி மருத்துவ அதிகாரிகள் வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என சிறிலங்காவின் சுகாதார அமைச்சர் தயாரத்ன கேட்டுக்கொண்டுள்ளார்.

சம்பள முரண்பாடுளைத் தீர்க்கும் யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், அதற்குத் தேவையான நிதியை உடனடியாக விடுவிக்க முடியாதுள்ளது. இது தொடர்பான வருடாந்த செலவீனம் 55 கோடியைத் தாண்டும். நிலுவை

(08ஆம் பக்கம் பார்க்க)

# இரு பொலிசாரை நாமே அழைத்துச் சென்றோம்!

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டு. செங்கலடியில் வைத்து சிறிலங்காபொலிசார் இருவரைத் தாமே அழைத்துச் சென்றதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

திமிலதீவில் வைத்து ராசிக் குழுவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிசாரினால் நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்டு கொலைக் குற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான

# விளையாட்டுப்போட்டி இன்று ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிஇன்று முதல் நடைபெறுகிறது. இதனடிப்படையில் இன்று 12ஆம் திகதி காலை உருத்திரபுரம் ம.வி.மைதானத்தில் 15,17,19 வயதுக்குட்பட்ட ஆண், பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியும், 19 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியும் அதேபோன்று

(08ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டாம் தவணை ஆரம்பமாகியும் 33 வீதமான பாடப்புத்தகங்கள் வரவில்லை

## - கிளி.வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி கரைச்சிக் கோட்ட பாடசாலைகளுக்கான இலவசப்பாடப்புத்தகங்களில் 33வீதமான புத்தகங்கள் இரண்டாவது தவணை ஆரம்பமாகியும் இன்னும் வந்துசேரவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கிளி.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவசாமி அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது அவர் தெரிவிக்கையில்; கிளிநொச்சி மாவட்ட கரைச்சிக்கோட்ட பாடசாலைகளுக்குத் தேவையான 76,589 இலவசப் பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக 59,020 பாடப்புத்தகங்களே இதுவரை இங்கு வந்துசேர்ந்துள்ளதெனவும் 17,569 புத்தகங்கள் இன்னும் வந்து சேரவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்தார்.

அத்துடன் 5ஆம் ஆண்டு மாணவர்களுக்கான ஆங்கிலப்பாடநூல் இதுவரை கரைச்சிக் கோட்டப் பாடசாலை களுக்கு வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் நிரந்தர கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சமுதாய முன்னேற்ற நிலையத்தால் நடத்தப்படும் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு நேற்று நண்பகல் 12.00 மணிக்கு மேற்படி பேணலகத்தில் நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் மங்கலவிளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவிப் பணிப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார். நிரந்தரக் கட்டடத்துக்கான அடிக்கல்லை சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த சந்திரன் நாட்டிவைத்தார்.

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக அரசியல் துறையைச் சேர்ந்த பாலையா, சமுதாய முன்னேற்ற நிலைய இயக்குநர் பூங்குனறன், அன்புச்சோலை மூதாளர் பேணலகப் பணிப்பாளர் குரு ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மூதாளர் பேணலக மூதாளர்கள், பணியாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

மூதாளர்களின் வாழ் நிலையை இலகுபடுத்தும் நோக்கில் சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் சுவிஸ்வாழ் தமிழ் இளைஞர் மன்றத்தின் நிதி உதவியிலேயே இக்கட்டடம் அமைக்கப்படுகிறது. மேற்படி கட்டடம் 10இலட்சம் ரூபா செலவில் கிளிநொச்சி - கனகபுரத்தில் அமைக்கப்பட உள்ளது. இதற் கான நிதியில் மூன்று இலட்சம் ரூபா நிதிஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பேணலகத்தில் 70இற்கும் மேற்பட்ட மூதாளர்கள் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# மாணவனை மோதிவிட்டு வாகனம் தப்பிச்சென்றது

## - மாணவன் வைத்தியசாலையில் அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

பாடசாலை விட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவனை எதிரே வந்த வாகனம் மோதியதில் மாணவன் படுகாயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட முதலாம் கட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பி.ப.2..30 மணியளவில் கிளிநொச்சி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் நடைபெற்றது.

பாடசாலைவிட்டு வீதி ஓரத்தால் துவிச்சக்கரவண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் எதிராக வந்த வாகனம் மேற்படிமாணவனை மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது.

அருகிலிருந்த பிரதேச செயலகத்தில் நின்றவர்களின் உதவியுடன் மாணவன் வேறொருவாகன உதவியுடன் கிளி.முதலாம் கட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப் பட்டதாகத் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்விபயிலும் அம்பாள் குளத்தினை வசிப்பிடமாகக் கொண்ட கணபதி செந்தூரன் வயது (13) என்ற மாணவனே மேற்படி சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான நிலையில் தற்போது கிளி. அக்கராயன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, நேற்று 12ஆம் திகதி நண்பகல் பேருந்தொன்று கிளி.மத்தியகல்லூரிக் கருகாமையில் ஏ-9 பிரதான வீதியில் வாகனமொன்றினை முந்துவதற்கு முயற்சிக்கையில் இருவாகனங்களும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன.

இச்சம்பவத்தில் எவருக்கும் எதுவித காயங்களும் ஏற்படவில்லையென்பதும் பேருந்திற்கு சிறிய சேதம் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)



கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு முன்வீதியில் வாகனத்தால் மோதுண்ட மாணவனின் துவிச்சக்கர வண்டியும் அவரது பாடசாலைப் பையும் அநாதரவான நிலையில் காணப்படுகிறது.



டிப்போச் சந்தி – கந்தபுரம் வீதியில் புழுதி கிளப்பிய வண்ணம். வேகமாகச் செல்லும் பயணிகள் பேருந்து. (படங்கள்: சோதி)


# இலவச மருத்துவ சேவை

## Dr. பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை, புதுக்குடியிருப்பு.

யாழ். போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவ நிபுணர்களும், எமது மருத்துவமனையும் இணைந்து இலவச மருத்துவ சேவையினை எமது மக்களுக்கு வழங்க உள்ளனர்.

**வழங்கப்படவுள்ள சேவைகள் :**

- சத்திர சிகிச்சை
- கண் சத்திர சிகிச்சை
- பெண் ஆரோக்கியம், மகப்பேற்று மருத்துவம்.

காலம்: 14-06-2003 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை.
15-06-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை.

பயன்பெற விரும்புவோர் குறிப்பிட்ட நாட்களில் காலை 10.00 மணிக்கு முன்னர் எமது வெளிநோயாளர் பகுதிக்கு சமுகம் தரவும்.

**பணிப்பாளர்,**
**Dr. பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை,**
**புதுக்குடியிருப்பு.**

(சி-8157)



# அளம்பில் புனித அந்தோனியார் திருநாளை முன்னிட்டு

# விசேட பேருந்துப் பணி

## அளம்பில் புனித அந்தோனியார் திருநாளை முன்னிட்டு விசேட பேருந்துப் பணிகள் நடைபெறும்

12 – 06 – 2003 பிற்பகல் 3.00 மணிக்கு மாத்தளனில் இருந்து புறப்பட்டு இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை, முள்ளியவளை, குமுழமுனை ஊடாக அளம்பில் சென்றடையும். பிற்பகல் 4. 15 மணிக்கு புதுக்குடியிருப்பில் இருந்து புறப்பட்டு மந்துவில், முல்லைத்தீவு ஊடாக அளம்பில் சென்றடையும். பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டு சிலாவத்தை ஊடாக அளம்பில் சென்றடையும் பிற்பகல் 2.30 மணிக்கு கேப்பாப்புலவு, தண்ணீரூற்று, குமுழமுனை ஊடாக அலம்பில் சென்றடையும். 13 – 06 – 2003 காலை 6.00 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து அளம்பில் சென்றடையும் என்பதை அறியத் தருகின்றோம்.

**முகாமையாளர்,**
தமிழீழ போக்கு வரவுக் கழகம்,
விசுவமடு.

(சி-8160)

# இஸ்ரேல் இராணுவத்திற்கு பதிலடி கொடுப்போம்

## - கமாஸ் அமைப்பின் தலைவர் அறிவிப்பு

(ஜெருசலேம்)

**காஸா நகர் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்கு தலுக்குப் பதிலடி கொடுக்கப் போவதாக பலஸ்தீன தீவிரவாத அமைப்பான கமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

பலஸ்தீனத்தின் காஸா நகர் மீது இஸ்ரேல் இராணுவ உலங்குவானூர்திகள் ரொக்கட்டுகளை வீசி நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளன.

இதில் கமாஸ் தீவிரவாத இயக்கத்தின் முத்த தலைவரான அப்துல் அஸிஸ் உட்பட பலர் பலத்த காயமடைந்துள்ளனர்.

கடந்த 08ஆம் திகதியன்று இஸ்ரேல் இராணுவத்தின் மீது பலஸ்தீன தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று கமாஸ் அமைப்பின் தலைவர் ஷேக் அகமது ஷியாஸிஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலை அடுத்து காஸா நகரில் தொடர்ந்து பதட்டம் நிடிக்கின்றது.

இஸ்ரேலின் தாக்குதல் நடவடிக்கைக்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ், பலஸ்தீன பிரதமர் அப்பாஸ் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகள் சமாதானச் சூழலைக் குழப்பிவிடும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, கமாஸ் தீவிரவாதிகள் மீதான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.



ஜெருசலேமில் அனுமதியின்றிக் கட்டப்பட்ட வீட்டை இஸ்ரேல் புல்டோசர் ஒன்று இடித்து அழிக்கும் காட்சி.



காஸா நகரில் உலங்குவானூர்தியால் தாக்கப்பட்ட ஹமாஸ் தலைவரின் காரைச் சூழ்ந்து நிற்கும் பலஸ்தீனர்கள்.

# செவ்வாய்க்கு றோபோ விண்கலம் அமெரிக்கா அனுப்பிவைப்பு

## - தண்ணீர், உயிரினம் பற்றி ஆராயும்

(வாஷிங்டன்)

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்காக அமெரிக்காவின் றோபோ ஆராய்ச்சி விண்கலம் விண்ணிற்கு ஏவப்பட்டுள்ளது.

விண்ணில் செவ்வாய்க் கிரகத்தில் ஆராய்ச்சி மேற் கொள்ள ஏற்கனவே 03 முறை விண்கலங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையில் செவ்வாய்க் கிரகத்தில் நீர் மற்றும் உயிரினங்கள் உள்ளனவா என்பதை கண்டறிய றோபோ ஆராய்ச்சி விண்கலம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள ஷ்ப் கனவர் ஏவுதளத்திலிருந்து நேற்று முன்தினம் இரவு விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு சனவரி மாதத்தில் இந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கும்.

செவ்வாயிலுள்ள மண் மற்றும் பாறைகள் பற்றிய தகவல்களையும், கிரகத்தின் பல்வேறு புகைப்படங்களையும் இந்த விண்கலம் சேகரித்து பூமிக்கு அனுப்பும்.

இதனைத் தொடர்ந்து மேலும் ஒரு றோபோ ஆராய்ச்சி விண்கலம் இந்த மாத இறுதியில் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்படவுள்ளது.



சீனப் பொறியியலாளரால் வரையப்பட்ட உலகில் மிக நீண்டதானதும் சீனாவில் முதன் முதலாக அமைக்கப்படவுள்ளதுமான கடல் போக்குவரத்துப் பாலத்தின் தோற்றம்.

# தாய்லாந்தில் தளம் அமைக்க அமெரிக்கா திட்டம்

## - பாங்கொக் பத்திரிகை தகவல்

(வாஷிங்டன்)

அமெரிக்கா தாய்லாந்தில் தமது இராணுவ தளம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு திட்டமிட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்கிழக்காசியாவில் தாக்குதல்களை மேற்கொள்ளத்திட்டமிடும் போராளிகளுக்கு எதிரான தமது செயற்பாட்டிற்கு தாய்லாந்தில் ஒரு தளம் இருக்க வேண்டுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது என பாங்கொக் செய்திப் பத்திரிகை இதுகுறித்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

தாய்லாந்து அமெரிக்காவுடன் தமது உறவுகளை வலுப்படுத்த முயல்கின்ற இவ்வேளையில் அமெரிக்கா இக்கோரிக்கையை முன்வைத்துள்ளது. செய்திப் பத்திரிகை வெளியிட்டுள்ள தகவலின்படி தாய்லாந்தின் இராணுவத் தளத்திலிருந்து அமெரிக்காவிற்கான நிலம் வழங்கப்படலாம் எனக் கூறப்பட்டுள்ளது.



காபூல் இராணுவ முகாமுக்கருகே தற்கொலைத் தாக்குதலில் பலியான தமது சக வீரரின் சவப் பெட்டிக்கருகே அவரின் உருவப்படத்தை வைக்கும் ஜேர்மன் இராணுவ வீரர்.

# அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தை இந்துக்களிடம் ஒப்படைக்க புதிய சட்டம்

## - ஆதரவு கோரப் போவதாக விஸ்வ ஹிந்து பரிசத் அறிவிப்பு

(புதுடில்லி)

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தை இந்துக்களிடம் ஒப்படைக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை இயற்ற பல்வேறு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து ஆதரவு கோரப் போவதாக விஸ்வ ஹிந்து பரிசத் அறிவித்துள்ளது.

அயோத்திப் பிரச்சினையில் அரசியல் தலையீடு இல்லாமல் மதத் தலைவர்களே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என பிரதமர் வாஜ்பாய் கூறிய கருத்துக்கு, பாரதிய ஜனதா உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய விஸ்வஹிந்து பரிசத்தின் பொதுச் செயலாளர் ப்பிரவீன் தொகாடியா அயோத்தி நிலத்தை இந்துக்களிடம் ஒப்படைப்பதற்கு ஏதுவாக நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதற்காக தாம் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து ஆதரவு கோரவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் இப்பிரச்சினையை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டியது அரசியல் கட்சிகளின் தார்மீக கடமை என்று கூறியுள்ளார்.

ஆனால் நீதிமன்றத்தின் மூலமே தீர்வு காணவேண்டும் என்று பாபர் மசூதி செயற்குழு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை அயோத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்து-முஸ்லிம் மதத்தலைவர்கள் ஒத்துக் கொண்டுள்ளதாகக் காஞ்சி சங்கராச்சாரியார் கூறியிருப்பதை முஸ்லிம் அமைப்புகள் கண்டித்துள்ளன. அத்தோடு அயோத்தி பிரச்சினை குறித்து சங்கராச்சாரியாருடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவும் இல்லை என்று முஸ்லிம் சட்டவாரியம் கூறியுள்ளது.

இந்நிலையில் அயோத்திப் பிரச்சினையில் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கவேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய் கேட்டுள்ளதை விஸ்வ ஹிந்து பரிசத் அமைப்பு கண்டித்துள்ளது.

இந்நிலையில் இப்பிரச்சினை பற்றி விவாதிக்க நாடாளுமன்றத்தை கூட்டவேண்டும் என சிவசேனைக் கட்சி கூறியுள்ளது.



ஹொங் கொங்கில் 4வயது சிறுவனைப் பலிகொண்ட அந்ராக்ஸ் கிருமிகள்

# நியாயமற்ற வட்டி வசூலுக்கெதிராக தமிழகத்தில் புதிய சட்டம்

(சென்னை)

வட்டி எனும் பெயரில் அநியாய வட்டி வசூலித்தால் 03 ஆண்டுகள் சிறை, தமிழக அரசின் அவசர சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

கந்து வட்டியை ஒழிக்கும் அவசர சட்டத்தை தமிழக அரசு நேற்றுமுன்தினம் பிறப்பித்துள்ளது.

இதன்படி கந்து வட்டி வசூலிப்பவர்களுக்கு 03 ஆண்டு சிறையும், 30000ரூபா அபராதமும் விதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கந்துவட்டி, மீற்றர் வட்டி, மணிக்கணக்குவட்டி எனும் விதவிதமான பெயர்களில் வட்டிக்குப் பணம் கொடுத்து அநியாயமாகப் பணம் சம்பாதிப்போர் அப்பாவி மக்களை கொடுமைப்படுத்துவதை தடுக்கவே முதலமைச்சரின் பரிந்துரையில் இச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

# ஈராக் மீது போர் தொடுத்த காரணத்தை நிரூபிக்கத் திணறும் புஷ்சும், ரொனிபிளேயரும்

ஈராக் போர் முடிந்து இருமாதங்களாகியும் விட்டது. ஆனால் ஏன் ஈராக் மீது தாக்குதல் நடத்தப்பட்டதோ அந்த காரணத்திற்கான செயற்பாட்டைதான் அமெரிக்கா, பிரிட்டிஷினால் கண்டுபிடிக்க முடியாத திணறல் நிலை உருவாகியுள்ளது.

பேரழிவு ஆயுதங்களையும் கண்டு பிடிக்க முடியவில்லை, சதாம் ஹுசைனையும் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆக அமெரிக்கா, பிரிட்டிஷ் தலைவர்கள் தமது சொந்த நலனுக்காகவே போர் தொடுத்துள்ளனர். எனும் முணுமுணுப்புத் தான் பரவலாக எல்லோராலும் பேசப்படுகின்றது.


அத்துடன் ஈராக் மீதான போர் அமெரிக்க புலனாய்வு அளித்த தகவலின் படியே தொடரப்பட்டது என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறிக் கொண்டது பொய் என்றும் சாதாரண தகவல்களை ஜோர்ஜ் புஷ்சும், ரொனிபிளேயரும் மிகவும் வலுவூட்டி; மிகைப் படுத்திக் கூறிவிட்டனர். இவர்கள் பொய்யர்கள் என்று அமெரிக்கப் பத்திரிகைகள் வெளிச்சம் போட்டுக் காட்டமுற்பட்டு நிற்கின்றன.

அதுமட்டுமன்றி ஈராக் நசுக்கப்பட அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் பீல்ட் தான் இரண்டாவது காரணம் என்றும், ஈராக் அணுகுண்டு தயாரிப்பின் இறுதி நிலையில் இருப்பதாகவும், செறிவூட்டப்பட்ட யுரேனியம் கிடைத்த மறுகணம் அணுகுண்டு சதாம் ஹுசைனின் கைவசம் என்றும் அது எமது நாட்டிற்கு அச்சுறுத்தலாகி விடும் என்றும் இவர் கூறிய குற்றச் சாட்டுக்களே இன்றைய ஈராக்கின் நிலைமைக்கு காரணம் என்றும் இராணுவ புலனாய்வு அதிகாரிகள் விசனப்படுகின்றனர்.

இதனால் இன்று ஜோர்ஜ் புஷ்ஷிற்கும், ரொனி பிளேயருக்கும் நெருக்கடியான சூழ் நிலை உருவாகிவிட்டது எனலாம்.

அமெரிக்க சனாதிபதி புஷ்ஷின் போர் வேட்கைக்கு, ஆதரவு வழங்கிய அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களே, இன்று ஈராக் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து வினாப்போர் தொடுத்துள்ளனர்.

அதேபோல் ,சனநாயக கட்சியின் கலிபோர்னிய பிரதிநிதி ஹென்றி, ஈராக்மீது இவ்வாறு அடாவடியாக போர் தொடுத்தது ஏன்... என கடிதம் மூலம் விளக்கம்


ஈராக்கில் அமெரிக்கத் தாக்குதலின் போது

கேட்டுள்ளார்.

அத்துடன் ஈராக் வசம் யுரேனியம் இல்லை என்று புலனாய்வு உறுதிப்படுத்தியுள்ள பின்னரும் மீண்டும் மீண்டும் ஏன் அதே குற்றச் சாட்டு தொடரப்பட்டது என்றும் வினா எழுப்பியுள்ளார்.

மறுபுறம் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்ததா... என்று ரொனிபிளேயரின் உண்மைத் தன்மையை ஆராய பிரிட்டிஷ் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

ஈராக் போரை தொடருவதற்காக ஜோர்ஜ் புஷ், ரொனிபிளேயர் உண்மைக்குமாறான பொய்யை நிலைநாட்டினார்களா... அல்லது இரு நாட்டு உளவுத்துறையும் தவறான வையா... எனும் விவாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பெரிதாக உருவெடுத்


அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர்

துள்ளது.

இதன் முதற் கட்டமாக ரொனிபிளேயர் நடந்ததை நடந்தபடி உண்மைகளை மட்டும் நாடாளுமன்றத்தில் கூற வேண்டுமென்று தொழிற்கட்சி போர்க் கொடி தூக்கியுள்ளது.

ஆனால் இவற்றையெல்லாம் ஜோர்ஜ் புஷ், ரொனிபிளேயர் வலுவாக மறுக்கின்றனர்.

அதேபோல் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தது என்று அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் உறுதிபடக் கூறுகின்றார். இக்குற்றச்சாட்டு கற்பனையல்ல. முழுக்க முழுக்க உண்மை என்றும் அவர் வாதிடுகின்றார்.

1980 களில் ஈரான் மீது சதாம் ஹுசைன்


சதாம் ஹுசைன்

பேரழிவு இரசாயன ஆயுதங்களைப் பிரயோகித்தமையையும், அதில் பல ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டு போனதையும் உலகறியுமே என ஆதாரமாகக் கூறியுள்ளார்.

அத்துடன் அன்று இருந்த பேரழிவு ஆயுதம் இன்றும் இருப்பதாக நாம் சந்தேகப்படுவதில் என்ன தவறு என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆனால் ஈரான் தாக்குதலையடுத்து, ஐ.நா. சபையின் ஆயுத கண்காணிப்புக் குழுவினர் பல இடங்களை சல்லடை போட்ட போது ஏனோ இரசாயனப் பேரழிவு ஆயுதங்கள் கிடைக்கவில்லை. அதனால் ஈராக் பேரழிவு ஆயுதங்களை அழித்து விட்டது என்று அறிக்கை சமர்ப்பித்து இருந்ததை அன்றும் அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றும் அதை நினைத்துக் கூடப் பார்ப்பதாக இல்லை.

அதேபோல் ஹான்ஸ் பிலிக்ஸ் தலைமையில் இரண்டாவது தடவையாகவும் ஈராக்கில் 148 இடங்களை 237 தடவைகள் சோதனைக்குட்படுத்திய போதும், அல்-சமூத் ஏவுகணையைத் தவிர வேறு எதுவுமே அவர்கள் வசம் சிக்கவில்லை.

இந்த அல்-சமூத் ஏவுகணை 150 கிலோ மீற்றர் தூரம் பாயக் கூடியது. ஐ.நா.சபையின் தூர எல்லையை மீறும் தயாரிப்பு என்பதால் ஈராக் அதனை அழிக்க முன்வந்து அழித்தது.

ஆனால் அமெரிக்க சனாதிபதி புஷ்சும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரும் இதனை எல்லாம் ஏற்றுக்கொள்ளும்நிலையில் அன்று இல்லை.

நடமாடும் உயிரியல் ஆயுதம் ஈராக் வசம் உள்ளதென்று போரை நடத்தி முடித்துவிட்ட இன்றைய நிலையில், சதாம் ஹுசைன் நாட்டில் இல்லாத வேளையில் ஏன் அமெரிக்க, பிரிட்டிஷினால் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.... எனும் வினாதான் தற்போதைய உலக நாடுகளின் எதிர்பார்ப்பு.

அதேநேரம் ஹான்ஸ் பிலிக்ஸ் இன்றுவரை ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை எனும் 45 பக்கம்கொண்ட அறிக்கையை கடந்த 02ம் திகதி ஐ.நா பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்து அமெரிக்கா பிரிட்டிஷை கடுமையாக விமர்சித்தும் உள்ளார்.

ஆனால் அமெரிக்காவின் நச்சரிப்பினால் மீண்டும் ஈராக்கில் 1400 சோதனையாளர்களை ஐ.நா.சபை மீண்டும் ஹான்ஸ் பிலிக்ஸ் அறிக்கை சமர்ப்பித்த இரண்டு நாட்களின் பின்னர் பாக்தாத்தினுள் அனுப்பியுள்ளது.

ஈராக்கினுள் இல்லாத பேரழிவு இரசாயன ஆயுதங்களை எத்தனை ஆயிரம் சோதனையாளர்களை பாக்தாத்தில் இறக்குவதன் மூலம்மட்டும் கண்டுபிடித்துவிட முடியுமா... என்றும், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களே இல்லை. இருப்பதாக புஷ் நிர்வாகமும், ரொனிபிளேயரும் உண்மையைத் திரிபுபடுத்தி, தமது நலனுக்காக பயன்படுத்தியுள்ளனர் என்று பெண்டகனின் இரகசிய அறிக்கை கூறுகின்றது.

ஆனால், அமெரிக்க சனாதிபதி புஷ்ஷோ ஈராக்கில் உள்ள பேரழிவு ஆயுத விபரம் விரைவில் வெளியிடப்படும் என கட்டாரில் இராணுவத்தின் மத்தியில் சூளுரைத்துள்ளார்.

ஏற்கனவே ஈராக்கில் அணுவாயுதம் தயாரிப்பதற்கான தொழிற்சாலைக் கூடங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை; தயாரிப்பில் ஈடுபடும் விஞ்ஞானிகள், தொழில் வல்லுநர்கள் யாருமே அகப்படவுமில்லை; அணுவாயுத மூலப்பொருட்களோ, உபகரணங்களோ எதுவுமே சிக்கவுமில்லை எனும் நிலைமை இருக்கையில் புஷ்சின் சூளுரைப்பு எப்படி சாத்தியமாகும் எனும்எதிர்பார்ப்பு மட்டுமே தற்போது எல்லோரது மனங்களிலும் தோன்றியுள்ள அச்சமாகும்.

ஏனெனில் ஈராக்கில் பேரழிவு ஆயுதம் இருப்பதாக உளவு அறிக்கைகள் கூறுவதாகப் போரை நடத்தி முடித்துவிட்ட ஜோர்ஜ் புஷ், ரொனிபிளேயர் இருவரும் பேரழிவு ஆயுத விபரங்கள் எனும் பட்டியலை மட்டும் தாமே தயாரித்து வெளியிட மாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதிப்பாடு இருக்க முடியும்?

ஏனெனில் இருவருக்கும் பாராளுமன்றங்களில் பலத்த எதிர்ப்பு தோன்றியுள்ளது. இருவரும்போருக்கான காரணத்தை விளக்க வேண்டும் எனும் நச்சரிப்பிற்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இவர்கள் பொய்கூற மாட்டார்கள் என்று எப்படி நம்பமுடியும் எனும்நிலைமையும் இல்லாமல் இல்லை.

இதேவேளை, சனாதிபதி புஷ்சும் , பிரதமர் ரொனிபிளேயரும் தற்போது, ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தன. அதை சதாம் ஹுசைன் அழித்திருக்கலாம் என்ற கருத்தை ஒத்து ஊதுவதில் ஈடுபட்டு உள்ளனர்.

ஆனால் ஈராக்வசம் பேரழிவு ஆயுதங்கள் இருந்தமையை கூறிய இருநாட்டு புலனாய்வும்

அ. கலைவாணி

ஏன் அழித்த விபரத்தைக் கூறவில்லை யெனும்வினா இவர்களைத் திக்குமுக்காட வைக்கின்றது.

ஏனைய நாடுகளைத் தாக்கும் வியூகம் அமெரிக்க புலனாய்வின் கையில்தான் தங்கியிருக்கின்றது. சிறிய துப்புக்கிடைத்தாலும் தன்னை எதிர்ப்பதாக அந்நாட்டைக் கூறுபோடும் அமெரிக்காவின் கொள்கை ஒருபோதும் மாறப்போவதில்லை. உலகின் வல்லரசு என்பதுடன் தன்னை எதிர்ப்பவர்கள் வாழமுடியாது எனும் போக்குடைய அமெரிக்கா,ஐ.நா.சபைக்குக் கட்டுப்படுவதாகக் கூறுவது வெறும் பூச்சாண்டி.

அத்துடன் இரசாயனப் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கூறப்பட்ட ஈராக் ஏன் தன்னைக் காத்துக்கொள்ள அவற்றைப்


அமெரிக்க இராஜாங்கஅமைச்சின் செயலர் கொலின்பவல்

பாவிக்கவில்லை. சதாம்ஹுசைன் அவற்றைப் பிரயோகிக்காது ஓடிஒளிவதேன்.... என்பனவெல்லாம் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் இருவருக்கும்தேவையற்ற, புரிந்துகொள்ள மறுக்கும் உண்மைகளாகும்.

எனவே அமெரிக்காவின் கோபத்திற்கு இலக்காகும் நாடுகளை யார்தான் காப்பாற்றுவது...?

## நிதியுதவியின் தன்மை குறித்து-

# பீரிஸ்—யசுகி அகாஷியின் கருத்துக்களில் முரண்பாடு

**டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு வழங்குவதாக உலக நாடுகளும் நிதி நிறுவனங்களும் உறுதியளித்துள்ள உதவித் தொகையின் தன்மை குறித்து முரண்பட்ட தகவல்கள் வெளிவந்துள்ளன.**

பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத்அமுனுகம டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் கடன்களே என கூறியிருப்பதை அமைச்சர் ஜீஎல்பீரிஸ் மறுத்துள்ளார்.

பி.பி.ஸியின் நிகழ்வொன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கியுள்ள பேட்டியில் தனது மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள உதவிகளில் நன்கொடைகளும், இலகுகடன்களும் மட்டுமே அடங்கியுள்ளன. கடன் எதுவும் வழங்கப்படவில்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை,இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட 45,000 கோடி ரூபாவில் உதவித்தொகை எவ்வளவு, கடன்தொகை எவ்வளவு, அதற்கான இலகு வட்டி எவ்வளவு, போன்ற விபரங்களும் இன்னும் தனித்து கணக்கிடப்படவில்லை எனவும் மற்றும் வடக்கு கிழக்குப் பிரதே சங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லையென விசேட தூதுவர் யசுகி அகாஷி தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து சந்தேக நபரை விடுவித்தார்

### அமைச்சரின் செயலர்

(கொழும்பு)

அமைச்சர் ஒருவரின் செயலாளர் பொலிஸ் நிலையத்துள் புகுந்து சந்தேக நபரை மீட்டுச் சென்றுள்ளார். இச்சம்பவம் கடந்த 07ம் திகதி இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் நடந்துள்ளது.

இச்சம்வம் பற்றித் தெரியவருவதாவது அமைச்சர் ஒருவரின் இணைப்பாளராகச் செயற்படும் ஒருவர் மேற்படிப் பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து தனது கைடத்தொலை பேசி மூலம் பல்வேறு அதிகாரிகளைத தொடர்புகொண்டு சந்தேகநபரை விடுவிக்குமாறு பொலிசாரை நிர்ப்பந்திக்குமாறு கேட்டு விடுதலை செய்து அழைத்துச் சென்றுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் இலங்கைப் போக்குவரத்துச் சேவையில் பணியாற்றும் சந்தேகநபர் எனவும் போக்குவரத்தில் பொலிசாரைத் தாக்கியது தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்ததாக அறியப்படுகின்றது.

இவர் கைது செய்யப்பட்டதை அடுத்து ஊழியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அன்று மாலை கிராமப்புறங்களுக்கான பஸ் சேவைகள் ஸ்தம்பிதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அரசின் மீதான சர்.சமூகத்தின் நம்பிக்கையை டோக்கியோ மாநாடு நிரூபித்துள்ளது

### -அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

டோக்கியோ மாநாடு சர்வதேச சமூகம் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையை நிரூபித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட இலக்கிற்கும் கூடுதலான 450 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை பெற முடிந்துள்ளமை மக்களுக்குக் கிடைத்துள்ள வெற்றியென அவர் மேலும் கூறியுள்ளார்.அரசு எதிர்பார்த்ததைவிட கூடுதலான உதவி கிடைப்பதற்கு இங்குகார ணிகள் உள்ளன என கூறியுள்ளார்.

## -கிளிநொச்சி மாவட்டத்தில் -

# 3510 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி,கண்டாவளை,பூநகரி, பளை ஆகிய பகுதிகளில் மீளக்குடிய மர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் மீள்குடியேற்ற கொடுப்பனவுகள், தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

நிக்கோட் நிறுவனத்தின் மூலம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில்2 330 குடும்பங்களுக்கும், கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் 655 குடும்பங்களிற்கும், பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் 271 குடும்பங்களுக்கும், பளைப் பிரதேச செயலர் பிரிவில் 240 குடும்பங்களிற்குமாக மொத்தம் 3510 மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா ரூபா 25,000 வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை நிக்கோட் நிறுவனம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சோ)

# தலைமைப்பீடத்தின் நடவடிக்கை குறித்து பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அதிருப்தி

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் அதிருப்தி நிலை காரணமாக பொதுமக்கள் அதன் மீது விரக்தி கொண்டுள்ளதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கம் தெரிவித்துள்ளது.

குறைந்த சம்பளம் சலுகைகள் இன்மையுடன் கடமையாற்ற நேர்ந்துள்ளமை என்பனவே தமது அதிருப்திக்கு முக்கிய காரணங்களாகும் எனவும் அந்த அமைப்புக் கூறியுள்ளது.

மேலும் ஒரே பதவியில் நீண்ட காலம் கடமையாற்ற வேண்டியுள்ளமையையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குத் தெரியப்படுத்தி யுள்ள போதும் இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை. தேசிய பொலிஸ் ஆணையகத்துக்கு இது பற்றிப் பேச நேரம் ஒதுக்குமாறு கேட்டபோதும் தமது கோரிக்கைகள் செவிமடுக்கப்படவில்லை என பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கம் கூறுகின்றது.

சனாதிபதி பிரதமர் அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துத் தமது பிரச்சினைகளைத் தெரிவிக்கப் போவதாகவும் அந்தச் சங்க அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்.போதனா வைத்தியசாலையின்-

## கண்ணிவெடி அகற்றும் பணி-

# சர்வதேச தரத்திற்கு உயர்ந்துள்ளதால் வேகம் குறைந்துள்ளது

### இணைப்பாளர் யோகன் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடுகள் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்பட்டமையாலேயே கடந்த காலங்களை விட மந்தகதியில் இப்பணி செல்வ தாக மனிதநேய கண்ணிவெடி அகற் றும் பிரிவின் இணைப்பாளர் யோகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு அமைவாக இராணுவத்தால் புதைக்கப்பட்ட மற்றும் அனாதரவாக விட்டுச் செல்லப்பட்ட ஏராளமான வெடி பொருட்கள் குறுகிய காலத்தில் பாரம்பரிய கண்ணிவெடி அகற்றும் உபகரணங்களைக்கொண்டும் அகற்றப்பட்டது. இதனால் மக்களின் மீள் குடியேற்றம் துரிதமாக நடைபெற்றது.

ஆனால் தற்போது நவீன உபகரணங்கள் கிடைத்தும், விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டும் இக்கண்ணிவெடிகள் அகற்றும்பணி முந்தகதியில் செல்கின்றது என கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 2002 ஏப்ரல் தொடக்கம் 2002 யூலை வரையான காலப்பகுதிகளில் 91,000 வெடிபொருட்களை அகற்றி தகர்த்தழித்தோம். இதனால் 39 மில்லியன் சதுர மீற்றர் பிரதேசம் மேற்குறித்த காலத்தில் வெடிபொருள் அச்சுறுத்தலில் இருந்து 150 கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களின் அதிதீவிர செயற்பாட்டால் விடுவிக்கப் பட்டது. இதனால் அதிகளவு மக்கள் விரைவாக தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்தனர்.

ஆனால் தற்போது 450 வெடி பொருள் அகற்றும் நிபுணர்கள் பணியாற்றியும் இரண்டு இலட்சத்து எழுபத்து ஏழாயிரம் சதுர மீற்றர் பகுதியையே வெடிபொருள் அச்சுறுத்தலில் இருந்து விடுவித்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

தற்போது மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடுகள் சர்வதேச தரத்துக்கு சென்றுள்ளதால் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாகவே வெடிபொருட்களை அகற்றவேண்டி உள்ளது. அதனால் தான் இப்பணிகள் மெதுவாக நகர்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். (லோ)

## -2002-நியாப் திட்டப் பணிகள் குறித்து-

# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு உலகவங்கிப் பிரதிநிதிகள் பாராட்டு

(அலுவலக செய்தியாளர்)

முல்லை. மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டிற்கான நியாப்திட்டப் பணிகளை உலக வங்கிப் பிரதிநிதிகள் பார்வையிட்டுத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்த உலக வங்கிப் பிரதிநிதிகள் அம்பகாமம், ஒலுமடு ஆகிய கிராமங்களைப் பார்வையிட்டனர். முதலில் அம்பகாமம் கிராமத்திற்குச் சென்ற இப்பிரதிநிதிகள் நீர்ப்பாசனத் திட்டம், வீதி புனரமைப்பு, கிணறுகள் புனரமைப்பு போன்றவற்றைப் பார்வையிட்டதுடன் ஜீவனோபாயத் திட்டங்களையும் பார்வையிட்டனர்.

அடுத்து ஒலுமடுக் கிராமத்திற்குச் சென்று நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்வையிட்டதுடன் வீதிப்புனரமைப்பு, பொதுமண்டப அமைப்பு, ஜீவனோபாயத் திட்டங்களையும் பார்வையிட்டதுடன், மாதர்சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுடன் ஜீவனோபாய ஆதார செயற்பாட்டின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்தனர்.

மேற்படி செயற்பாடுகளை முற்றாகப் பார்வையிட்டும், கேட்டறிந்தும் கொண்டதன் பின்னரே தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயற்பாடுகளுககுப் பாராட்டுத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் முல்லை.மாவட்ட நியாப்திட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமநல அபிவிருத்திச் சேவை பிரதிப் பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை.மாவட்ட சமூக வலுவூட்டாளரின் இணைப்பாளர், பணிப்பாளர், அரச சார்பற்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

வவுனியாவில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இனம்தெரியாத ஆயுததாரியினால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 7.00 மணியளவில் தனது றம்பைக்குள வீட்டில் இருந்த போது கைத்துப்பாக்கியுடன் வீட்டினுள் புகுந்த ஒருவர் அவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக அறியவருகிறது.இறந்தவர் சுப்பிரமணியம் என்ற 35 வயதுடைய நபராவார்.

# பொது மன்னிப்பு

மாலைதீவில் ஆயுள் கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இலங்கையர் ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மகிந்த லியனாராச்சி என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவரின் உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ள தாலேயே பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள் ளது. இவர் இம்மாத முற்பகுதி யில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். மனிதாபிமான அடிப்படையில் இவரைவிடுதலை செய்த மாலைதீவு அரசுக்கு இலங் கை வெளிவிவகார அமைச்சர் கிரான்பனான்டோ நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## -யாழ்.போதனா வைத்தியசாலையின்-

# வெளிநோயாளர் பிரிவு நேற்று முன்தினம் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, நேற்று முன்தினம் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் மருத்துவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதனாலேயே இந்த ஸ்தம்பிதநிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் வடக்கு-கிழக்கில் பணிபுரியும் சகல வைத்தியர்களுக்கும் விசேடஇடர்கால கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் அரசாங்க வைத்திய அதிகாரிகளாக பணிபுரியும் மருத்துவர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தில்,யாழ்போதனா வைத்திய சாலை மருத்துவர்களும் ஈடுபட்டனர்.

இதனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் எதுவும் நேற்று முன்தினம் நடைபெறவில்லை. இன்றுமுதல் அனைத்து வைத்தியசாலைகளுக்கும் இப்போராட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## -வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின்-

# 06ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சான்றோர் கௌரவிப்பும்

(வவுனியா)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஆறாம் ஆண்டு நிறைவு விழாவும், சான்றோர் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 14ம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்திலசிறப்பாக இடம்பெற உள்ளது.


இந்நிகழ்வில் மாருதம் சஞ்சிகை வெளியீடு இடம்பெற உள்ளதுடன் வன்னி ஊற்று இசைநாடாவும், வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

அத்துடன் சான்றோர் விருது வளங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது. இதில் "கல்வியியற் செல்வர்" விருது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி திரு.செ.அழகரத்தினம் அவர்களுக்கு வழங்கப்பட உள்ளது. " சிறுவர் இலக்கியச் செல்வர்" விருதை வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சின் முன்னாள் மேலதிக கல்விப்பணிப்பாளர் திரு ச. அருளானந்தம் அவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் கல்வி கலை இலக்கிய கர்த்தாக்கள் கௌரவிப்பு இடம் பெறுவதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

# 17 ஆம் ஆண்டு நிறைவு நினைவு நாள்

12 - 06 - 2003 [வியாழக்கிழமை]

பெற்ற அன்னையிடம்
04 • 04 • 1960



மாவீரரிடம்
12 • 06 • 1986

## லெப். அர்ச்சுனா [ஆர்.பி.ஜி]
## (சதாசிவம் தமிழரசுவரன்)

பிரபா அண்ணரிடம் - 28 - 10 - 1983

மண்ணைக் காத்தோம், மக்களைக் காத்தோம், மனுநீதியுடன் நடக்கின்றோம்.
மற்றவர் மண் பிடிக்கவும் மாட்டோம்.
அவர்கள் மண் வளத்தைச் சுரண்டவும் மாட்டோம்.
கண்ணிலுமினிய சுதந்திரத்தை விட்டுக் கொடோம் - இது
கடவுளின் மீது ஆணை. அறிந்து கொள்வீர் மானிடரே!
பண்பான பாதையிற்தான் செல்கின்றோம்.
பயங்கரவாதமென்ற பெயரைச் சூட்டாதீர் படித்த மேதைகளே!
தண்ணீரில் எழுதவேண்டாம் எங்கள் உடன்படிக்கைதனை.
தமிழர் கடந்த கால வரலாற்றை மறக்கவில்லை.
வேறு

தியாகத்தின் பெறுமதி என்ன? துரோகத்தின் பெறுமதி என்ன?

46, புதுஅத்தியடி வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(சி-8155)

சிந்தனைக்கு

இலட்சியத்தில் ஒன்றுபட்டு, உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-06-2003

## பொ. ஐ. மு.வின் கவலை

டோக்கியோவில் வழங்கப்படுவதாக உறுதி அளிக்கப்பட்ட நிதி உதவியில் 90 வீதம் வரையிலானது நிபந்தனைகளுடன் கூடிய கடன் அடிப்படையிலானது. மிகச் சிறிய தொகையே நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. ஆகையினால், பெறப்பட்ட கடன் தொகையானது இலங்கையை மேலும் கடன்கார நாடாக்கிவிடும் என பொ.ஐ. முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சரத் அமுனுகம கவலை வெளியிட்டுள்ளார்.

பொ.ஐ. முன்னணியின் கவலையானது ஒருபுறத்தில் நியாயமானதே. ஏற்கனவே பெரும் கடன் சுமையினால் வருடாந்தக் கடன் கொடுப்பனவுகளைக் கூடச் சீராகச் செலுத்த முடியாமல் சிறிலங்கா அரசு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கையில், பெரும் தொகையொன்றைக் கடனாகப் பெற்றுக் கொள்வதானது நாட்டிற்குப் பெரும் சுமையை கொடுப்பதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லைத்தான்.

ஏனெனில் தற்பொழுது பெறப்படும் கடன் தொகை மூலம், இலங்கை வாழ் மக்கள் அனைவரும் (சுமார் 1 கோடி 90 லட்சம் பேர்) பல ஆயிரக்கணக்கான ரூபாக்களுக்கு கடன்காரர்கள் ஆகின்றனர். குத்து மதிப்பாகப் பார்த்தால் இக்கடன் காரணமாக இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் 22,500 ரூபாவிற்கு மேல் கடன்காரர்கள் ஆகின்றனர். இதேவேளை, இத்தொகைக்கான வட்டிகளையும் சேர்த்துக் கொண்டால் ஒருவர் மீதான கடன் சுமை மிக அதிகமானதாகவே இருக்கும்.

இந்நிலையில், சரத் அமுனுகம தெரிவித்தது போல் வருடாந்தம் கட்ட வேண்டிய கடன் தொகைக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் வருடவருமானம் கூடப் போதாததாக இருக்கலாம். இதேவேளை ஏற்கனவே அரசாங்கம் பெரும் தொகை நிதியைக் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளமை காரணமாக சிறிலங்கா அரசாங்கத்தால் இச்சுமையைச் சுமக்க முடியுமா என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும்.

ஆனால், இதில் உள்ள முக்கியமான விடயம் என்னவெனில், பொ.ஐ. முன்னணிக்கு இத்தகையதொரு கேள்வியை எழுப்புவதற்கு அருகதை உண்டா என்பதே ஆகும். ஏனெனில், உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து பெரும் தொகை நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான பெரும் பிரயத்தனங்களை பொ.ஐ. முன்னணியும் ஆட்சியில் இருந்த போது மேற்கொண்டது என்பதே உண்மை. இதற்கென உலக அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் நிபந்தனைக்கு உட்பட்டு செயற்பட்டது என்பதும் உண்மை.

இதற்காக சனாதிபதி சந்திரிகா கூட உதவி வழங்குவோர் மாநாட்டில் கலந்து கொள்வதற்குச் சென்றதுண்டு. ஆனால், முன்னைய மாநாடுகளைவிட டோக்கியோ மாநாடு சற்று வித்தியாசமானது. அதாவது ஒப்பீட்டளவில் இது பெரியது. அத்தோடு இம்மாநாட்டிற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவமும் அதிகமானது. இதனைத்தவிர அடிப்படையில் தமது நெருக்கடிகளைக் கூறி நிபந்தனைகளை, உத்தரவாதங்களை வழங்கி கடன்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதே.

ஆகையினால், எத்தனை ஆயிரம் கோடி ரூபாக்கள் கடன் பெறப்பட்டது. இதனை எவ்வாறு செலுத்தப் போகின்றார்கள் என்பதெல்லாம் பொ.ஐ. முன்னணி பேசக்கூடிய விடயங்களல்ல. ஏனெனில், பொ.ஐ. முன்னணியும் இத்தகைய கடன்களைப் பெற முயற்சித்தது ஆயினும் அதற்கு வாய்ப்புக்கிட்டவில்லை என்பதே உண்மையாகும். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

அதுமட்டுமல்ல, பொ.ஐ. முன்னணி அரசாங்கம் நாட்டில் நிதி வீண்விரயம் செய்வது குறித்துப் பிரஸ்தாபிக்கும் யோக்கியதை அற்றதொரு கட்சியாகும். ஏனெனில் வருடாந்தம் 10,000 கோடி ரூபாவரையில் யுத்தத்திற்கெனச் செலவு செய்த பொ.ஐ. முன்னணி அரசாங்கம் அபிவிருத்திப் புனர்வாழ்விற்கென பெறப்படும் கடனுதவி மக்கள் மீது கடன் சுமையை அதிகரிக்கும் எனக் கண்ணீர் வடித்தல், இதற்கு எதிராக ஆட்சேபம் தெரிவித்தல் என்பன பொருத்தமற்ற விடயமாகும்.

இதேவேளை, பொ.ஐ. முன்னணி கடன் உதவி தொடர்பாக தமது அதிருப்தியை வெளியிட்டமை தனியாக பெரும் தொகைக் கடன் பெறப்படுகின்றது. மக்கள் மீது சுமை ஏற்படுகின்றது என்பது மட்டுமல்ல . பெறப்படும் நிதியில் யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குறிப்பிடத்தக்க அளவு நிதி பயன்படலாம் என்ற அச்சமும் பொ.ஐ. முன்னணிக்கு உண்டு. அதாவது தமிழர் தாயகப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் முனைப்புப் பெற்றுவிடலாம் என்ற அச்சமும் அதற்கு இருந்திருக்கலாம்.

ஆனால், யுத்தத்தினால் பொ.ஐ. முன்னணி ஏற்படுத்தி விட்டுச் சென்ற பேரழிவுகளில் இருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கு போதிய அளவிலான நிதி உதவி அவசியமானதே. அத்தோடு சிறிலங்கா அரசாங்கத்திற்குக் கடனுதவி பெறுவதும் ஒன்றும் புதியதுமல்ல. ஏற்கனவே, யுத்தம் உட்பட்ட பல்வேறு தேவைகளுக்காகப் பெரும் தொகைக் கடன் பெறப்பட்டுள்ளது. ஆகையினால், தற்பொழுது பெறப்படும் நிதி உதவிகளை பொ.ஐ. முன்னணியின் எதிர்ப்பானது கொள்கை சார்ந்ததாக இருக்க மாட்டாது. அரசியல் நடவடிக்கைகள் சார்ந்ததாகவே இருக்கமுடியும்.

-ஓய்வில் செல்ல அனுமதிக்காததற்கு-

# ஒரு கோடி ரூபா நட்ட ஈடு கோரி தேர்தல் ஆணையாளர் வழக்கு

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமிப்பது காலதாமதமாவதால், தம்மை ஓய்வில் செல்ல அனுமதி மறுப்பது மனித உரிமை மீறலாகும் என்றும் அதற்காகத் தமக்கு ஒரு கோடி ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு தேர்தல் ஆணையாளர் மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த மனுவில் அவர் நீதிபதி, சனாதிபதியின் செயலாளர், சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற அரசியல் தலைவர்களைப் பிரதிவாதிகளாக அறிவித்துள்ளார்

இந்த மகஜரில் 1970ம் ஆண்டு பதவிக்கு வந்த நான் 1975 ஆம் ஆண்டு தேர்தல் திணைக்களத்தில் இணைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை பணியாற்றி வருகின்றேன் என கூறும் அவர் 17 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்துக்கு முன்னர் இருந்த சட்டவிதிகளுக்கமைய 60 வயது பூர்த்தியாகிய ஒருவர் ஓய்வில் செல்ல முடியும்.

அதற்கு முன்பு சம்பந்தப் பட்டவர் உடல், உளப் பாதிப்பிற்குள்ளாகும் வேளை சனாதிபதியால் கடமையாற்ற ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் தேவை யேற்படும் போது ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கலாம் என்று யாப்பு விதிகள் கூறுகின்றன. மனுதாரராகிய நான் 2002 ம் ஆண்டு 28 ஆம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்துள்ளேன். அச்சந்தர்ப்பத்தில் 17 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறியிருப்பினும் நான் ஓய்வில் செல்லலாமா என நீதிபதியிடமும் ஆலோசனை கேட்டுள்ளேன் எனினும் புதியவர் நியமனம் பெறும்வரை சேவையிலிருக்குமாறு நீதிபதி கூறியுள்ளார்.

இதனிடையே 17 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் 27(3) ம் பிரிவிலுள்ளபடி மேற்படி மாற்றம் கொண்டுவரப்பட்ட 2001 ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் தேர்தல் ஆணையாளர் சம்பந்தப்பட்ட எல்லா அலுவல்களுக்கும் ஆணைக்குழுவே பொறுப்பாகும்.

2003 ஆம் ஆண்டு தற்போதைய ஆணையாளராகிய எனக்கு61 வயது பூர்த் தியாகியுள்ள நிலையில் என்னை ஓய்வில் செல்ல எவ்வித நடவடிக்கையும் எடுக்காமையாலும் ஆணைக்குழு நியமிக்காமையினாலும் நான் ஓய்வு பெற்றுச் செல்ல முடியாதுள்ளது. இது ஒரு மனித உரிமை மீறல் செயலாகும் எனக் கூறியுள்ளதோடு தமக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை ஆணைக்குழு பொறுப்பேற்க உத்தரவிடுமாறும் நட்டஈட்டை வழங்குமாறும் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

-புலிகளைக் கைது செய்யும் படைகளுக்கெதிரான-

# கிழக்கு பல்கலை.மாணவர் போராட்டத்திற்கு யாழ்.பல்கலை.மாணவர் ஆதரவு தெரிவிப்பு

(திருகோணமலை)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், நிராயுதபாணிகளான விடுதலைப்புலிகளை -ஆயுத பாணிகளான சிறிலங்காப் படையினர் தொடர்ந்து கைதுசெய்து வருகிறமையைக் கண்டித்தும், படையினரால் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு, புளியந்தீவுக்கோட்டப் பொறுப்பாளரை விடுதலை செய்யக் கோரியும்-கிழக்குப் பல்கலை மாணவர்கள் நேற்று முன்தினம் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு, யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் தமது ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக , யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

சமாதானத்திற்கான சூழ்நிலை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இவ்வேளை, சிறிலங்காப் படையினர் அச்சுறுத்தல்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

பதற்றநிலையைத் தோற்றுவித்து. மக்களின் இயல்பு வாழ்வை சீர்குலைத்து, போரொன்றுக்கான முஸ்தீப்பில் ஈடுபட்டுள்ளனரா என்ற சந்தேகம். இதனால் ஏற்பட்டுள்ளதென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

## ஆனந்த சங்கரிக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

தமிழ் விடுதலைக்கூட்டணித் தலைவரும் தமிழ் தேசிய கூட்ட மைப்பின் யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான வீ.ஆனந்த சங்கரிக்கு தற்போது கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆனந்த சங்கரியின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு புலனாய்வுப் பிரிவினர் அறிவுறுத்தல் வழங்கி யுள்ளதைபடுத்தே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் யாழ்ப் பாணத்தில் மக்களைச் சந்தித்து உரை யாடச் சென்ற அவரிடம் இது தொடர்பாக பத்திரிகையாளர் கேட்டபோது, மக்களுக்குச் சேவை செய்வதே எனது நோக்கம் மக்கள் சேவக னுக்கு ஆபத்து எனில் பாதுகாப்பு அர சின் பொறுப்பு எனப் பதிலளித்துள்ளார்.

## 15 ஆம் திகதி திருநாள்திருப்பலி

(மன்னார்)

மன்னார் தள்ளாடி பிரசித்திபெற்ற புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருநாள் திருப்பலி எதிர்வரும் 15ஆம் திகதி காலை 7.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதற்கான ஆயத்த வழிபாடும், கொடியேற்றமும் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. (மி)




# வரும் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்வேன்

-தடகள வீராங்கனை அஞ்சில் ஜார்

தற்போது அமெரிக்காவில் பயிற்சி பெற்றுவரும் தடகள வீராங்கனை அஞ்சில் ஜார், தன்னால் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்ல முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நீளம் தாண்டும் போட்டிகளில் சிறப்பாக விளையாடிவரும் இந்திய வீராங்கனையான அஞ்சில்ஜார் ஒலிம்பிக் போட்டிக்கு தன்னைத் தயார்ப்படுத்தும் வகையில் அமெரிக்காவில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றார்.

முன்னாள் ஒலிம்பிக் வீரரான மைக்பாவலிடம்பயிற்சி பெற்றுவரும் அஞ்சில்ஜார், லொஸ் ஏஞ்சல் நகரில் நடைபெற்றுவரும் போட்டிகளில் கலந்து கொண் டுள்ளார்.

இதில் அஞ்சில் ஜார் 6.65 மீற்றர் நீளம் தாண்டி புதிய சாதனை படைத்துள்ளார்,

தனது திறமை மீது நம்பிக்கை வைத்துள்ள இவர் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் பாரீஸ் நகரில் நடைபெறவுள்ள சர்வதேசப் போட்டிகளிலும் அடுத்த ஆண்டு ஏதென்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலும் தன்னால் பதக்கம் வெல்ல முடியும் என உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதத்தில் சர்வதேச அளவில் 13 ஆம் இடத்தில் இருந்த அஞ்சில் ஜார், தற் போது தீவிர பயிற்சிக்குப் பின்னர் 7 ஆம் இடத்திற்கு முன்னேறியுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

-பிரெஞ் கோப்பை கால்பந்துப் போட்டி-

# முன்கூட்டி நடத்தப்படவுள்ளதால் இந்தியா அதில் பங்கு பற்றாது

-இந். கால்பந்தாட்ட கூட்டமைப்பு அறிவிப்பு

(புதுடில்லி)

வியட்நாமில் நடைபெறவுள்ள பிரெஞ் கோப்பை கால்பந்து போட்டியில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இந்திய கால்பந்து கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வியட்நாமில் பிரெஞ் கோப்பை கால்பந்துப் போட்டி வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறுவதாக இருந்தது. இதில் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் பங்கேற்க இருந்தன. இந்நிலையில் இப்போட்டி வரும் ஆகஸ்ட் மாதம் நடத்தப்படவுள்ளதாக போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் திடீரென அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து கல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் பிரியரங்கதாஸ் இப் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

போட்டி முன் கூட்டியே நடத்தப்பட அறிவித்துள்ளதால், அணியைத் தயார் செய்வதற்கு போதிய அவகாசம் இல்லை என்று தெரிவித்த அவர் இந்திய அணி இப் போட்டியில் பங்கேற்காது என்று கூறியுள்ளார்.

# இல. இனப்பிரச்சினை தொடர்பில் இந்.வின் கொள்கை மாறவேண்டும்

## - வை.கோ,பிரதமர் வாஜ்பாயிடம் கோரிக்கை

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசு தனது கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என ம.தி.மு.கழகப் பொதுச் செயலர் வை.கோ கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் வாய்பாஜ்க்கும், வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கப் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தடாச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள வை.கோ.வும் மேலும் எட்டுப் பேரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு மீண்டும் இம்மாதம் 18ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# பிந்துனுவெவ படுகொலை தீர்ப்பு ஒத்திவைப்பு

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை தொடர்பான இறுதித் தீர்ப்பு வழங்குவதை உயர் நீதிமன்றம் யூலை 1ஆம் திகதி வரை பிற்போட்டுள்ளது.

இந்தப் படுகொலை வழக்கு விசாரணைகள் முடிவடைந்த நிலையில் நேற்று இது தொடர்பான தீர்ப்பு வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இது தொடர்பான தீர்ப்பின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படாத நிலையில் இந்தத் தீர்ப்பும் பிற்போடப்பட்டுள்ளது.

இப்படுகொலைச் சம்பவத்தில் 27 பேர் கொல்லப்பட்டும், 14 பேர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக 41 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# யாழ். இல் விசாரணைக்கு உள்ளாகியுள்ள மற்றொரு சிறுவர் பராமரிப்பு நிலையம்!

(வடமராட்சி)

பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்த சிறார்களைப் பாலியல் ரீதியில் இம்சைகளுக்கு உள்ளாக்கியதாக மேலும் ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையம் பொலிஸ் விசாரணைக்கு உள்ளாகியுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளரான ஆர். பி. ருவான் சந்திர சேகரவினால் யாழ். நீதிமன்றிற்கு எழுத்து மூலம் வழங்கப்பட்ட புகார் ஒன்றை அடுத்து உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள வசந்த நாகபூசனி அம்மன் சிறுவர் பராமரிப்பு நிலைய நிர்வாகம் பொலிஸ் விசாரணை உள்ளாக் கியுள்ளது.

யாழ். நீதிவான் விக்கினராசாவின் பணிப்புரையின் கீழ் அங்கு தங்கியிருக்கும் இரு சிறுமிகளது வாக்கு மூலங்களைப் பதிவு செய்த பொலிசார் பராமரிப்பு நிலையக் காவலாளியான இரத்தினம் செல்லய்யா (வயது-65) என்பவரையும் கைது செய்துள்ளனர். (27)

## நிர்வாக சபை தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 8ஆம் திகதியன்று கிறிஸ்ரிருபன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பெற்றனர். தலைவர் ஜெயக்குமார், துணைத் தலைவர் ஜெயந்தன், செயலர் ரகுல கரன், துணைச் செயலர் செல்வி அருந்ததி, பொருளாளர் சுரேஸ் குமார் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் ஐவரும், போசகராக கிறிஸ்ரிருபனும் தெரிவு செய்யப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## நோயாளர் நலன்...

கலளச் செலுத்த 100 கோடி ரூபா தேவை. இது சம்பந்தமான அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் புதன் கிழமை தாக்கல் செய்யப்பட இருக்கின்றது. அதன் பின்னர் வைத்தியர்கள் 44 சதவீத சம்பள அதிகரிப்பைப் பெறுவார்கள்.

வடக்கு - கிழக்கில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் கொள்கையளவில் இணங்கியுள்ளது. ஆனால், 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவைக் கோருவது நியாயமற்றது என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## தொழிற்சங்க...

சம்பள முரண்பாடுகளை நீக்குவது வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்குவது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவ அதிகாரிகள் நேற்று முன்தினம் முதல் வேலைநிறுத்தம் செய்துவருவது தெரிந்ததே.

## கையஸ் வாகன...

சென்றுள்ளனர்.

இதேவேளை தந்தையை கடத்திச் செல்ல முற்பட்ட கும்பலைத் தடுக்க முற்பட்ட அவரின் மகனான குலசிங்கம் விஜி (வயது-20) எனும் இளைஞனும் அக்கும்பலால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார் .(27)

## ரணில் உரை...

வர்த்தன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சேனநாயக்க, டி. எம். ஜெயரட்ண மருத்துவர் திஸ்ஸவித்தான, டி. யூ. குணசேகர ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## விளையாட்டுப்...

வட்டக்கச்சி ம.வி.யில் இன்றுகாலை 17 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியும் கிளி. பாரதிபுரம் வித்தியாலயத்தில் பெண்களுக்கான எல்லே போட்டியும் இடம் பெறவுள்ளது.

நாளை 13ஆம் திகதி கிளி.மத்திய கல்லூரியில் காலை ஆண், பெண்களுக்கான கபடிப்போட்டியும், கிளி.கனகபுரம் ம.வியில் காலை 15,17,19 வயது பெண்களுக்கான கரபந்து, வலைபந்து போட்டிகளும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 14ஆம் திகதி வட்டக்கச்சி ம.வி.யில் காலை ஆண்களுக்கான எல்லே போட்டியும் கிளி. பாரதிபுரம் வித்தியாலயத்தில் காலை ஆண்களுக்கான துடுப்பாட்ட போட்டியும் இடம்பெறவுள்ளதென கிளி.வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார். (சோ)

## இரு பொலிசாரை...

றம் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சத்தியராஜனை விடுதலை செய்தால் தமது பொறுப்பிலுள்ள பொலிசாரையும் விடுவிப்போம் என்று மட்டு. - அம்பாறை மாவட்ட பிரதேச துணை அரசியல்துறைப் பொறுப்பாளரும், ஊடகத் தொடர்பாளருமான கிருஷன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா படையினரின் காவலரண்கள் சூழப்பட்ட பிரதேசங்களில் இடம்பெறும் கொலைச் சம்பவங்களுக்கு தம்மீது குற்றம் சுமத்தி சமாதானச் சூழலைக் குழப்ப தீய்சக்திகள் முயன்று வருவதாகவும் கிருஷன் மேலும் தெரிவித்துள்ளார்.

## தற்காலிக நிர்வாக...

கவில்லை என்பதனையிட்டு நாம் பெரும் வேதனை அடைந்துள்ளோம். தற்காலிக நிர்வாகக்கட்டமைப்பு என்ற அபிவிருத்தி நடவடிக்கைக்கென பிரதமரினால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட புதிய பேரே தவிர வேறொன்றும் இல்லை.

எனவே போதிய அதிகாரமின்மையும்,அதிகார வரையறைக்கு உட்பட்டதுமான இவ்யோசனை எம்மால் நிராகரிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க புதிய மாற்றதுடன் கூடியதும் வினைத்திறன் மிக்கதுமான ஓர் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பிற்கான உடன்படிக்கை திட்ட வரைபு தொடர்பிலான எமது வேண்டுகோளிற்கு திருப்தியான பதிலளிக்கவில்லை. சர்வதேச உதவி வழங்குனர் சமூகத்திற்கான திரு.ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பிற்கு நேர் எதிர்மாறாக நாம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை பரிந்துரைப்பது என்ன? இதற்கு அரசு அறிவிப்பது என்ன? என்பது தொடர்பிலான புலன் உணர்வில் கடுமையாக வேறுபட்டு நிற்கின்றோம்.

எமது தலைமையானது தமிழீழ விடுதலைப்புலிகளின் பரந்த பங்களிப்புடன் கூடிய வடக்கு-கிழக்கிற்கான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை அல்லது ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு திட்டவரைவை பரிந்துரைத்தபோது சிறிலங்கா அரசு பிராந்திய அபிவிருத்திக்கான ஒரு கட்டமைப்பு பொறிமுறை அலகுடன் கூடிய ஒரு சபையை பதிலாக அளித்திருக்கின்றது.

பிரதமர் ரணில் சிறிலங்கா அரசியல் அமைப்பிற்கும் சட்டங்களுக்கும் பின்னால் மறைந்து கொண்டிருக்கின்றார்.

தசாப்த காலங்களாக போராடி வரும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதப் போக்குடன் ஆக்கப்பட்ட இவ் அரசியல் அமைப்பிற்குள்ளும் சட்டங்களுக்கு உள்ளுமே அவர் ஒளிந்திருக்கின்றார்.

மேலும் விடுதலைப்புலிகளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசும் இலங்கையின் நீண்ட இன வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரும் எண்ணத்தோடு இறுதியான அரசியல் தீர்வினை எட்டுவதற்கு வெவ்வேறு பார்வைகளைக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் தாயகத்துக்கும் சுயநிர்ணயத்துக்குமான, அங்கீகரிக்கக் கூடியதான ஒரு புதிய இனச்சார்பற்ற நடுநிலையான அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதனூடக இலங்கையில் உள்ள ஆட்சி முறையில் துரித மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது தொடர்பாக விடுதலைப்புலிகள் பரிந்துரைத்திருந்தனர்.

எனவே பிரதமர் அரசியல் அமைப்பது மறுசீரமைப்பின் தேவைக்கு முகம் கொடுத்து நிற்கும் போதே நாம் பரிந்துரைத்தோம்.

எமது அமைப்பு ஓர் இடைக்கால நிர்வாக நிர்மாணத்தை பரிந்துரைக்கின்ற போதும் இந்த நிலைமையானது திரு.விக்கிரமசிங்கவின் வலுவற்ற ஆட்சியில் இது சாத்தியம் இல்லாத ஒன்றாகவே அடையாளம் காணப்படுகிறது.

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான கட்டாயத்தின் பேரில் நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளை ஈர்ப்பதற்கு சர்வதேச பாதுகாப்பு வலயம் ஒன்றில் புகலிடம் தேடுவதற்கு அரசு முனைகின்றது. இப்பாதுகாப்பு வலயமைப்பைத் தேடுவதன் மூலம் இத்தீவின் அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைவிதியை தொலைதூர விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் வகையில் தடுக்க முடியாத மேலதிக அணிகளின் மூலம் சர்வதேச தீர்ப்பிற்கு விடுவதை மூன்றாம் தரப்பு அனுசரணையில் இருந்து சமாதான நடவடிக்கையை கொழும்பு அரசு அமைத்துள்ளது.

விடுதலைப்புலிகளின் பிரகடனங்களுக்குள்ளோ ஆய்வுரைகளுக்குள்ளோ வடிவமைப்புக்குள்ளோ நாம் டோக்கியோ பிரகடனத்தில் கூறப்பட்ட கூற்றுக்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் எதுவித ஆலோசனைகளும் வழங்கி கொழும்பு அரசு விடுதலைப்புலிகள் தொடர்பான தமது சொந்த செயல் திறனை அதன் தந்திரோபாய முறையுடனும் அனுசரணையாளர்களின் உதவியுடனும் திணிக்கும் முகமாக இவ் ஒவ்வாத யோசனை வரைபை வடிவமைத்துள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பான்...

சமுத்திரத்தில் வர்த்தக உல்லாசப் பயணத்துறைகளின் மையமாக இலங்கை மாற்றப்படும்.

அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களில் ஒவ்வொரு கைத்தொழில் துறைக்காகவும் பிரத்தியேக மான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஜப்பான் பிரதான பங்காளியாக இருந்து உதவிசெய்யும் என்று நம்பிக்கை வெளியிட்ட பிரதமர் இலங்கையில் முதலீடு செய்யும் ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படும் எனத் தெரிவித்ததோடு டோக்கியோ மாநாட்டில் கிடைத்த உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஆராயும் கூட்டம் ஒன்று வரும் செப்ரெம்பரில் நடைபெறும் எனவும் குறிப்பிட்டார்.


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
08-07-1977

வீரச்சாவு:
12-06-1998

### கப்டன் ஈசன்

(அருமைச்சந்திரலிங்கம் ஆனந்த்)

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கங்கள்

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(சி-3319)

சு. அருமைச்சந்திரலிங்கம்
(துரைமணி) குடும்பம்.

## அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்

சமுதாய முன்னேற்ற நிலையம், முல்லை. மாவட்டச் செயலகத்தினால் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப் பட்ட இலக்கங்கள்.

01.ஆம் பரிசு - 28165
02.ஆம் பரிசு - 9535
03.ஆம் பரிசு - 27242

20 ஆறுதல் பரிசுகளுக்குரிய அதிர்ஷ்ட இலக்கங்கள்.

| | |
|---|---|
| 01. 25246 | 11. 16984 |
| 02. 7748 | 12. 21699 |
| 03. 11288 | 13. 16954 |
| 04. 27421 | 14. 14603 |
| 05. 33552 | 15. 12118 |
| 06. 26698 | 16. 27359 |
| 07. 29639 | 17. 12762 |
| 08. 28398 | 18. 20403 |
| 09. 21119 | 19. 14830 |
| 10. 2154 | 20. 24041 |

அதிர்ஷ்ட இலக்கங்களுக்குரிய பரிசுப்பொருட்களை 10.08. 2003 ற்கு முன்பாக பெற்றுக்கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு நிகழ்வுக்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமுதாய முன்னேற்ற நிலையம்
முல்லை. மாவட்டம்.

(சி-8156)